வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு, வேறு இடத்தில் புதிய தாசில்தார் அலுவலகம் கட்டித் தர முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இருக்க இடம் இல்லாதவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னால், இருப்பவர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னால்தான் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

சத்துணவுக் கூடம்

***784—திரு. கே.பி. கந்தன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி, கண்ணகி நகர் பகுதியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி, கண்ணகி நகர் பகுதியிலுள்ள துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க ரூ.2.50 இலட்சம் மற்றும் அதே பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க ரூ.2.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேலும், அதற்கான நிருவாக அனுமதியும் 22—10—2010—ல் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.

திரு. கே.பி. கந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகரில் இரண்டு இடங்களில் சத்துணவுக் கூடம் அமைக்க வேண்டுமென்று 15—6—2011 அன்று வினா எழுப்பியிருந்தேன். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எனது தொகுதி மட்டுமல்ல, விதி 110—ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையில் தமிழ்நாடு முழுவதும் சத்துணவுக் கூடங்கள் அமைக்கவும் (மேசையைத் தட்டும் ஒலி) காலிப் பணியிடங்களை நிரப்பவும் ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் சார்பாக சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கத்தில் இருந்த சமுதாயக் கூடத்தை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக காவல் நிலையத்திற்காக எடுத்துக் கொண்டார்கள். ஆக, 17,500 பேர் வாழக்கூடிய அந்தப் பகுதியில் ஒரு சமுதாயக் கூடம் இல்லாமல் அந்த மக்கள் பரிதவிக்கிறார்கள். எனவே, மீண்டும் அந்தப் பகுதிக்கு சமுதாயக் கூடத்தைப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பினால் அதற்குப் பதில் அளிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

பணிமனை

***153—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தை மையமாக வைத்து போக்குவரத்துக் கழக தனி பணிமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் நகரத்திற்கு 24 கிலோ மீட்டர் தொலைவில் தூத்துக்குடி நகர் மற்றும் தூத்துக்குடி புறநகர் என இரு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் இரு பணிமனைகள் இயங்கி வருகின்றன. இந்தப் பணிமனைகளிலிருந்து இயக்கப்பட்டுவரும் பேருந்துகளின்மூலம் ஒட்டப்பிடாரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளுக்குப் போதுமான அளவில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. அரசு ஆணையின்படி, பணிமனைகளுக்கு இடையே உள்ள தூரம் 40 கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என உத்தரவு இருப்பதால், ஒட்டப்பிடாரம் பகுதியில் பயணிகளின்